[திரு. செ. அரங்கநாயகம்] [1982 மார்ச் 15

பயன்படுத்தும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வது, மாணவர்களால் பொதுவாக அமைதியின்மை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதை மாணவர்கள் உணர வேண்டும். அப்படியானால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவர்கள் அமைதியாக இருப்பதுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, தொடர்ந்து விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும்.

(ஆ) தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் நோயாளிகள் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கு. பா. பழனியப்பன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. பா. பழனியப்பன்: துணைத் தலைவரவர்களே, ''அரசின் தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள நோயாளிகள் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி உண்ணாவிரதம் இருப்பது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் பர்கூர் இல்லத்தில் உள்ள தொழுநோயாளிகள் தவிர, மற்ற ஒன்பது இல்லங்களில் உள்ள இல்லவாசிகள் உண்ணாவிரதம் மேற்கொள்ளவில்லை.

பர்கூர் இல்லவாசிகள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர்—

(1) இல்லவாசி திரு. வீரபாசு என்பவரை உளுந்தூர்ப்பேட்டை இல்லத்திற்கு மாற்றிய உத்திரவை ரத்து செய்ய வேண்டும்.

(2) தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள உணவு செலவினத் தொகை ரூபாய் 2.30-ஐ அதிகப்படுத்துதல் வேண்டும்.

இது குறித்து உதவி இயக்குநர் (மறுவாழ்வு இல்லங்கள்) அவர்களிடமிருந்து அறிக்கைப் பெறப்பட்டது. அவர் தனது அறிக்கையில், பர்கூர் இல்லவாசிகளை நேரடியாக சந்தித்து அவர்கள் கோரிக்கையை கேட்டறிந்ததாகவும், திரு. வீரபாசு என்கிற இல்லவாசியின் மாற்றல் உத்திரவை ரத்து செய்யவும்,

1982 மார்ச் 15] [திருமதி கோமதி சீனிவாசன்]

உணவு செலவினத் தொகையை உயர்த்தவும் மேற்படி இல்ல நிர்வாக அதிகாரிக்கு அறிவுரை வழங்கியுள்ளார் என்றும், இதற்கு இல்லவாசிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

தற்போது பர்கூர் இல்லத்தில் நிலைமை சீரடைந்துவிட்ட தாகவும், இல்லவாசிகள் உணவுப் பொருட்கள் பெற்றுக் கொண்ட தாகவும் அறிக்கை அனுப்பியுள்ளார்.

திரு. கு. பா. பழனியப்பன்: துணைத் தலைவரவர்களே, இதுவரை அங்கே கொடுக்கப்பட்டு வந்த உணவுப் பொருட்கள் எப்படிப்பட்டவை என்பதைக் காட்டுவதற்காக சிலவற்றைக் கொண்டு வந்திருக்கிறேன். நாற்றம் அடிக்கிற அரிசியும், உளுத் துப்போன துவரம் பருப்பும், புளித்துப் போன வெல்லமும்தான் இதுவரை கொடுக்கப்பட்டு வந்தது. இனிமேலாவது அவை மாற் றப்பட வேண்டும். அது மட்டுமல்ல. 1977–78 ஆம் ஆண்டில் 12.49 இலட்ச ரூபாயும், 1978–79 ஆம் ஆண்டில் 16.28 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து செலவழிக்கப்படாமல் இந்தத் துறையில் மிச்சப்படுத்தியதாக அறிகிறேன். அதனால் அவர்களுக்கு தேவையான அளவுக்கு வசதிகள் செய்து கொடுக்க வில்லை. கக்கூஸ், பாத்ரூம், ஆகியவைகளுக்கு கதவுகள் இல்லா மல் இருப்பதால் உடனடியாக அவைகளை சீர்படுத்திக் கொடுத்து மேலும் தேவையான வசதிகளைச் செய்து தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பர்கூர் இல்லத்திலே நல்ல விதமான உணவைத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் எனக்குத் தெரிந்தவரையில் உண்மையாகும். ஆனால் மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நல்லவிதமான உணவு கொடுக் கப்படவில்லை என்றும் நாற்றமெடுத்த உணவு கொடுக்கப்படு கிறது என்றும் குறிப்பிட்டார்கள். எனவே மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கொடுத்த நல்ல கோரிக்கையினை கவனத்தில் கொண்டு அதிகாரிகளிடம் கூறி பர்கூர் இல்லத்திலே எப்படிப் பட்ட நல்ல உணவைக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்பாடு செய்கிறேன் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து 1980–81 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை சரி யான முறையிலே அவர்களுக்காகச் செலவழிக்கப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டினைக் கூறினார்கள். அதுபற்றிய விவரம் எனக்குக் கொடுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியினை அவர் களுக்காகச் செலவு செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே செலவு செய்யாமல் இருப்பதான விவரம் எனக்குக் கிடைக்கவில்லை. அதுபற்றியும் நான் விசாரிக்கிறேன் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, பாவப்பட்ட ஜன்மங்களாக இருக்கின்ற அந்தத் தொழு நோயாளிகளின் மீது பற்றும் பாசமும் எப்போதும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில் நமக்கு கருத்து வேறு பாடு கிடையாது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கின்ற போது உயர் அதிகாரி பர்கூருக்கு நேரடியாகச் சென்று பார்த்து அந்த உணவிற்கான செலவினைப் பொறுத்தவரையிலே 2 ரூபாய் 30 காசு என்று இருப்பதை உயர்த்துவதற்கு ஒப்புக் கொண்டிருக் கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த 2 ரூபாய் 30 காசு என்பது 1972 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்பதுதான் எனக்குக் கிடைத்த தகவலின்படியாகும். ஆகவே இந்தத் தொகை யினை எவ்வளவாக உயர்த்தப் போகிறார்கள் என்பதையும் அரசின் பொறுப்பிலே இருக்கின்ற மற்ற இல்லங்களுக்கும் அந்த உயர்வு பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து மற்ற அரசு மருத்துவமனைகளிலே வழங்கப்படுவது போன்ற உணவு அவர்களுக்கு வழங்கப்படுமா என்பதோடு தட்டு, டம்ளர் டூத் பேஸ்ட், பிரஷ், போன்றவற்றை—அவர்கள் டி.வி. கேட்கவில்லை. மற்ற பெரிய வசதிகள் எதுவும் கேட்கவில்லை —தட்டு, டம்ளர் போன்றவற்றைத்தான் அவர்கள் கேட்கிறார் கள், இதுபோன்ற அத்தியாவசியமான தேவைகளையாவது கொடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அவர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகின்ற 2 ரூபாய் 30 காசு என்பதை 2 ரூபாய் 75 காசாக உயர்த்தி வழங்குவதற்காக அங்குள்ள அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மற்ற மருத்துவமனைகளிலே வழங்கப்படுகின்ற உணவினை போன்று அவர்களுக்கும் உணவு கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். காலை உணவாக தேநீரும் சிற்றுண்டியும் கொடுக்கப்படுகின்றது. மதிய உணவு கொடுக்கப் படுகின்றது. மாலையில் தேனீரும், இரவில் உணவும் கொடுக்கப் படுகின்றது. அதோடு மட்டுமல்லாமல் தினந்தோறும் மோர் வழங்கப்படுகின்றது. வாரம் ஒரு முறை இறைச்சி கொடுக்கப் படுகிறது. அடுத்தபடியாக சுதந்திர தினம் மற்றும் விழா நாட் களிலே, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாட்களிலே ஒரு ரூபாய் அளவிலே ஒரு சிறப்பு உணவும் வழங்கப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தட்டு அவர்களுக்குக் கொடுக் கப்படுகின்றது. டூத் பேஸ்ட், பிரஷ் போன்றவைகள் எல்லாம் சரியான முறையிலே வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அப்படி இல்லை என்றால் உடனடியாக வழங்கப்படும். அடுத்து உணவிற்கான தொகை உயர்த்தப்படும் என்பதைப் பொறுத்தவரையிலே 10 இல்லங் களுக்கும் அந்த 2 ரூபாய் 75 காசு அளவுள்ள உணவு கொடுக்கப் படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.